செ.வெ. எண்: 801

பத்திரிக்கை செய்தி

18/9/2010

போக்குவரத்து துறை

## சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றினால் அபராதம் மற்றும் அதிகப்படியான சரக்கினை சொந்த பொறுப்பில் இறக்க நடவடிக்கை

நாளுக்கு நாள் நெடுஞ்சாலைகளில் விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று சரக்கு வாகனங்களில் அதிக சுமை ஏற்றுவதாகும். அதிக சுமை ஏற்றும் சரக்கு வாகனங்களினால் விபத்துக்கள் அதிகரிப்பதோடு சாலைகள் மற்றும் பாலங்கள் விரைவில் பழுதடைந்து விடுகின்றன. இதனைக்கருத்தில் கொண்டு போக்குவரத்து துறை சரக்கு வாகனங்களில் அதிக பாரம் ஏற்றுவதை முற்றிலும் தடுக்க தீவிர நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.

மோட்டார் வாகன சட்டம், பிரிவு 113 மற்றும் 114 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி சரக்கு வாகனங்களில் அனுமதிக்கப்பட்ட அளவிற்கு அதிகமாக பாரம் ஏற்றும் வாகன ஓட்டுநர் மற்றும் உரிமையாளர்கள் தங்கள் சொந்த பொறுப்பில் அதிகப்படியான பாரத்தை இறக்கி வைத்த பின்னரே மேற்கொண்டு சாலையில் தொடர்ந்து செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன சட்டம், பிரிவு 194 மற்றும் 200-ன் அடிப்படையிலும் போக்குவரத்து துறையின் சுற்றறிக்கையின்படியும் நிர்ணயிக்கப்பட்ட எடைக்கு அதிகப்படியான சரக்குகளை ஏற்றிவரும் பிற மாநில வாகனங்களுக்கு அபராதம் ரூ.2000/- மற்றும் அதிகப்படியான ஒவ்வொரு மெட்ரிக் டன்னிற்கும் அபராதம் ரூ.1000/- வசூலிப்பதோடு அதிகபடியான சரக்கினை இறக்கி வைப்பதற்கான செலவினங்களையும் வாகன உரிமையாளர்களே ஏற்றுக் கொண்டு அதிகபடியான சரக்கினை இறக்கி வைத்த பின்னரே செல்ல அனுமதிக்கப்படும்.

உச்சநீதிமன்றமும் அனுமதிக்கப்பட்ட எடைக்கு அதிகமாக சரக்குகளை ஏற்றிவரும் வாகனங்களின் மீது மோட்டார் வாகன சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி உள்ளது. எனவே, அனைத்து சரக்கு வாகன உரிமையாளர்களும் உச்சநீதிமன்ற உத்தரவின்படி அதிகப்படியான சரக்குகளை ஏற்றுவதை தவிர்க்க வேண்டும். மேற்கண்ட சட்ட விதிமுறைகளை கடைபிடிக்காத வாகன ஓட்டுநர் / உரிமையாளர் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கப்படுகிறது.

இப்பொருள் தொடர்பாக மாநில எல்லையோர சோதனைசாவடிகளில் தொடர் சோதனை மேற்கொள்ளப்படும். எனவே சரக்கு வாகனங்களின் உரிமையாளர்கள் பாரம் ஏற்றும் போது சாலை பாதுப்பினை கருத்தில் கொண்டு அதிக பாரம் ஏற்றுவதை முற்றிலும் தவிர்க்க கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

போக்குவரத்து ஆணையர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9.